सत्यमेव जयते

# भारत का राजपत्र
# The Gazette of India
# இந்திய அரசிதழ்

**असाधारण**
**EXTRAORDINARY**
**சிறப்பிதழ்**

**भाग XV अनुभाग 1**
**Part XV Section 1**
**பகுதி XV பிரிவு 1**

**प्राधिकार से प्रकाशित**
**PUBLISHED BY AUTHORITY**
**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

---

**नई दिल्ली, सोमवार, 21 मार्च, 2022/1944 शक**
**New Delhi, Monday, 21st March, 2022/1944 Saka**
**புது தில்லி, திங்கட்கிழமை, 21 மார்ச், 2022/1944 சக**

---


Ministry of Law and Justice
(Legislative Department)
New Delhi
சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்
(சட்டமியற்றுத் துறை)
புது தில்லி

The Translation in Tamil of The Foreign Aircraft (Exemption from Taxes and Duties on Fuel and Lubricants) Act, 2002 (36 of 2002),The Repatriation of Prisoners Act, 2003 (49 of 2003), The Cigarettes and Other Tobacco Products (Prohibition of Advertisement and Regulation of Trade and Commerce, Production, Supply and Distribution) Act, 2003 (34 of 2003), The Uttaranchal (Alteration of Name) Act, 2006 (52 of 2006), The Prohibition of Child Marriage Act, 2006 (6 of 2007), The Orissa (Alteration of Name) Act, 2011 (15 of 2011), The Indian Institute of Petroleum and Energy Act, 2017 (3 of 2018), The Muslim Women (Protection of Rights on Marriage) Act, 2019 (20 of 2019), and The Central Educational Institutions (Reservation in Teachers' Cadre) Act, 2019 (10 of 2019) are hereby published under the authority of the President and shall be deemed to be the authoritative Texts thereof in Tamil under Clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50/1973).

அயல்நாட்டு வான்கலச் (எரிபொருள் மற்றும் உயவுப்பொருட்கள் மீது வரிகள் மற்றும் தீர்வைகள் விதிப்பதிலிருந்து விலக்களித்தல்) சட்டம், 2002 (36/2002), சிறைக் கைதிகளைத் தாயகத்திற்கு அனுப்புதல் சட்டம், 2003 (49/2003), சிகரெட்டுகள் மற்றும் பிற புகையிலைத் தயாரிப்புகள் (விளம்பரம் செய்தலைத் தடை செய்தல் மற்றும் வணிகம் மற்றும் வாணிபம், உற்பத்தி செய்தல், வழங்குதல் மற்றும் விநியோகம் செய்தலை முறைப்படுத்துதல்) சட்டம், 2003 (34/2003), உத்தராஞ்சல் (பெயர் மாற்றம் செய்தல்) சட்டம், 2006 (52/2006), குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006 (6/2007), ஒரிசா (பெயர்மாற்றம் செய்தல்) சட்டம், 2011 (15/2011), இந்தியக் கல்நார்எண்ணெய் மற்றும் எரிசக்தி நிறுவனச் சட்டம், 2017 (3/2018), முஸ்லீம் பெண்கள் (திருமண உரிமைகளைப் பாதுகாத்தல்) சட்டம், 2019 (20/2019), மற்றும் மையக் கல்வி நிறுவனங்கள் (ஆசிரியர்களின் பணிநிலைப்பிரிவில் ஒதுக்கீடு) சட்டம், 2019 (10/2019) ஆகியவற்றின் தமிழ்மொழிபெயர்ப்பு, குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரஉரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு 2 இன் கூறு (அ) இன்படி இவையே தமிழில் அதிகாரஉரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

# குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006

(எண் 6/2007)

[2007, ஜனவரி 10]

குழந்தைத் திருமணங்களை முறைப்படி நடத்தி வைப்பதைத் தடை செய்வதற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்கு வகைசெய்வதற்குமானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஏழாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், குழந்தைத் திருமணத்தடைச் சட்டம், 2006 என்று வழங்கப்பெறும்.

(2) இது, [1][* * * * *], இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்; மேலும் அது இந்தியாவிற்கு வெளியேயும் அப்பாலும் உள்ள இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் கூட பொருந்தும்:

**வரம்புரையாக:** இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், பாண்டிச்சேரி ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் குடியுரிமையைத் துறந்துவிட்டவர்களுக்குப் பொருந்துதல் ஆகாது.

(3) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று[2] செல்லாற்றல் பெறும்; மற்றும் வெவ்வேறு மாநிலங்களுக்காக வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம் மற்றும் இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கான வகையம் எதிலுமுள்ள சுட்டுகை எதுவும் மாநிலம் எதன் தொடர்பாகவும் அந்த வகையம் அந்த மாநிலத்தில் செல்லாற்றல் பெறுவதற்கான ஒரு சுட்டுகையாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,–

(அ) "குழந்தை" என்பது, ஓர் ஆணாகயிருப்பின், இருபத்தோரு வயது முடிவடையாதவராகவும், ஒரு பெண்ணாகயிருப்பின், பதினெட்டு வயது முடிவடையாதவராகவும் உள்ள ஒரு நபர் என்று பொருள்படும்;

(ஆ) "குழந்தைத் திருமணம்" என்பது, எந்தவொரு திருமணத்திற்கு ஒப்பந்தம்செய்துகொள்ளும் தரப்பினர்கள் இருவரில் ஒருவர் குழந்தையாக இருக்கிறாரோ அந்த ஒரு திருமணம் என்றும் பொருள்படும்;

(இ) "ஒப்பந்தம்செய்துகொள்ளும் தரப்பினர்கள்" என்பது, ஒரு திருமணத்தைப் பொறுத்தவரை அதன் மூலமாக எவருடைய திருமணம் முறைப்படி நடத்தி வைக்கப்படுகிறதோ அல்லது நடத்தி வைக்கப்படவுள்ளதோ அந்தத் தரப்பினர்களில் ஒருவர் என்று பொருள்படும்;

(ஈ) "குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலர்" என்பது, 16 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி அமர்த்தப்பெற்ற குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலரை உள்ளடக்கும்;

1. சட்ட எண் 34/2019 இன் 95 ஆம் பிரிவு மற்றும் ஐந்தாம் இணைப்புப்பட்டியலில் "ஜம்மு –காஷ்மீர் மாநிலம் நீங்கலாக" என்ற சொற்கள் (31–10–2019 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டன.

2. 2007, நவம்பர் 1, 2007, அக்டோபர் 30 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண்.எஸ்.ஒ 1850 (E) ஐ காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3(ii) ஐ பாக்க.

(உ) " மாவட்ட நீதிமன்றம்'' என்பது, எந்த ஒரு பகுதிக்குக் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம், **1984** இன் **3** ஆம் பிரிவின்படி நிறுவப்பட்ட ஒரு குடும்ப நீதிமன்றம் இருந்துவருகிறதோ அந்தப் பகுதி எதிலும், அத்தகைய குடும்ப நீதிமன்றம் என்றும், மற்றும் எந்தவொரு பகுதிக்கு குடும்ப நீதிமன்றம் இல்லாமல் ஒரு மாநகர உரிமையியல் நீதிமன்றம் இருந்துவருகிறதோ அந்தப் பகுதியிலுள்ள அந்த நீதிமன்றம் என்றும், மற்றும் பிற பகுதி எதிலும், முதலேற்பு அதிகாரவரம்புடைய முதன்மை உரிமையியல் நீதிமன்றம் என்றும் பொருள்படும்; மற்றும் இந்தச் சட்டத்தில் கையாளப்படும் பொருட்பாடுகள் பொறுத்து அதிகாரவரம்புடையது என அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் பிற உரிமையியல் நீதிமன்றம் எதனையும் உள்ளடக்கும்; 66/1984.

(ஊ) "உரிமைவயதடையாதவர்'' என்பது, எந்தவொரு நபர், உரிமைவயதடைந்தவர் சட்டம், **1875** இன் வகையங்களின்படி, அவருடைய உரிமைவயது அடைந்திராதவராகக் கொள்ளப்பட வேண்டியுள்ளாரோ அந்த ஒரு நபர் என்று பொருள்படும்; 9/1875.

குழந்தையாக இருந்து ஒப்பந்தம்செய்து கொள்ளும் தரப்பினரின் தெரிவுரிமையில் குழந்தைத் திருமணங்கள் தவிர்தகு நிலையாதல்.

3. **(1)** இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்னரோ பின்னரோ முறைப்படி நடத்தி வைக்கப்பட்ட குழந்தைத் திருமணம் ஒவ்வொன்றும், திருமணத்தின் போது குழந்தையாக இருந்து ஒப்பந்தம்செய்துகொள்ளும் தரப்பினரின் தெரிவுரிமையில் தவிர்தகு நிலையதாக இருத்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** செல்லாநிலையதென்ற தீர்ப்பாணையொன்றினால் குழந்தைத் திருமணம் ஒன்றைச் செல்லாநிலையதாக்குவதற்கான மனு ஒன்று திருமணத்தின் போது குழந்தையாக இருந்து திருமணத்திற்கு ஒப்பந்தம்செய்துகொள்ளும் ஒரு தரப்பினரால் மட்டுமே மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிடப்படலாம்.

**(2)** மனுவை முன்னிடும் சமயத்தில் மனுதாரர், ஓர் உரிமைவயதடையாதவராக இருப்பாராயின், மனுவானது குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலருடன் சேர்ந்து அவனுடைய அல்லது அவளுடைய காப்பாளர் அல்லது (வழக்குத்) துணை நண்பர் மூலமாக முன்னிடப்படலாம்.

**(3)** இந்தப் பிரிவின்படி மனுவானது, எச்சமயத்திலும், ஆனால் மனுவை முன்னிடும் குழந்தை உரிமைவயதடைந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்பு முன்னிடப்படலாம்.

**(4)** இந்தப் பிரிவின்படி செல்லாநிலையதென்ற தீர்ப்பாணையொன்றை வழங்குங்கால், மாவட்ட நீதிமன்றம், திருமணத்தின் இரு தரப்பினரையும், அவர்களின் பெற்றோர் அல்லது காப்பாளர்களையும், திருமண நிகழ்வின் போது அவர்களால் மறுதரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணம், விலைமதிப்புள்ள பொருட்கள், அணிகலன்கள் மற்றும் பிற பரிசுப் பொருட்களை, அல்லது அத்தகைய விலைமதிப்புள்ள பொருட்கள், அணிகலன்கள், பிற பரிசுப் பொருட்கள் மற்றும் பணம் ஆகியவற்றின் விலைமதிப்பிற்குச் சமமானதொரு தொகையினை நேர்வுக்கேற்ப, மறு தரப்பினரிடமோ அவனுடைய அல்லது அவளுடைய பெற்றோர் அல்லது காப்பாளரிடமோ திருப்பிக்கொடுக்குமாறு, அவர்களைப் பணிக்கும் ஆணையொன்றைப் பிறப்பித்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** இந்தப் பிரிவின்படியான ஆணை எதுவும், தொடர்புடைய தரப்பினர்கள் மாவட்ட நீதிமன்றத்தின் முன்பு முன்னிலையாகி அத்தகைய ஆணை ஏன் பிறப்பிக்கப்படுதல் ஆகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு அவர்களுக்கு அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

குழந்தைத் திருமணத்தின் பெண் ஒப்பந்தத் தரப்பினருக்கு வாழ்க்கைப்படியுதவிக்கும் உறைவிடத்திற்குமான வகையம்.

4. (1). 3 ஆம் பிரிவின்படி தீர்ப்பாணையொன்றை வழங்குங்கால், மாவட்ட நீதிமன்றம் திருமணத்தின் பெண் ஒப்பந்தத் தரப்பினருக்கு அவள் மறுமணம் செய்து கொள்கிற வரையில் வாழ்க்கைப்படியுதவி வழங்குமாறு குழந்தைத் திருமணத்தின் ஆண் ஒப்பந்தத் தரப்பினரைப் பணித்து மற்றும் அத்தகைய திருமணத்தின் ஆண் ஒப்பந்தத் தரப்பினர் உரிமைவயதடையாத ஒருவராக இருக்கும் நேர்வில், அவனுடைய பெற்றோரையோ காப்பாளரையோ பணித்து, இடைக்கால அல்லது இறுதி ஆணை ஒன்றும் கூட பிறப்பிக்கலாம்.

(2) வழங்கப்படவேண்டிய வாழ்க்கைப்படியுதவித் தொகையின் அளவானது, குழந்தைக்கான தேவைகள், அவளுடைய திருமணத்தின் போது அத்தகைய குழந்தையால் துய்த்து வரப்பட்ட வாழ்க்கைமுறை மற்றும் பணம் வழங்கும் தரப்பினரின் வருமான வழிவகைகள் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு மாவட்ட நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) வாழ்க்கைப்படியுதவித் தொகையானது மாதந்தோறுமோ அல்லது முழுமொத்தத்தொகையாகவோ வழங்கிடப் பணிக்கப்படலாம்.

(4). 3 ஆம் பிரிவின்படி மனுச் செய்யும் தரப்பினர் பெண் ஒப்பந்தத் தரப்பினராக இருக்கும் நேர்வில், மாவட்ட நீதிமன்றம் அவளுடைய மறுமணம் வரையில் அவளுடைய உறைவிடம் குறித்தும் கூட பொருத்தமான ஆணையொன்றைப் பிறப்பிக்கலாம்.

குழந்தைத் திருமணங்களின் வழி பிறந்த குழந்தைகளின் பாதுகாப்பும் வாழ்க்கைப் படியுதவியும்.

5. (1) குழந்தைத் திருமணத்தின் வழி குழந்தைகள் பிறந்திருக்கிறவிடத்து, மாவட்ட நீதிமன்றம், அத்தகைய குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான உரிய ஆணையொன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

(2) இந்தப் பிரிவின்படி குழந்தையொன்றைப் பாதுகாப்பதற்கான ஆணையொன்றைப் பிறப்பிக்குங்கால், குழந்தையின் நல்வாழ்விற்கும், சீரிய நலனிற்கும் மாவட்ட நீதிமன்றத்தால் தலையாய ஓர்வு அளிக்கப்பட வேண்டியதாக இருத்தல் வேண்டும்.

(3) குழந்தையொன்றைப் பாதுகாப்பதற்கான ஆணையொன்று, குழந்தையின் நலன்களை முழுமையாக நிறைவு செய்யும் அத்தகைய முறையில் மற்ற தரப்பினருக்குக் குழந்தையை அணுகும் வாய்ப்பு கொடுப்பதற்கான உரிய பணிப்புரைகளையும் மற்றும் குழந்தையின் நலனில் மாவட்ட நீதிமன்றம் பொருத்தமெனக் கொள்கிற அத்தகைய பிற ஆணைகளையும் கூட உள்ளடக்கலாம்.

(4) மாவட்ட நீதிமன்றம், திருமணத்திற்கான தரப்பினர் ஒருவராலோ அல்லது அவர்களுடைய பெற்றோராலோ அல்லது காப்பாளர்களாலோ குழந்தைக்கு வாழ்க்கைப்படியுதவி வழங்குவதற்கான உரிய ஆணையொன்றும் கூட பிறப்பிக்கலாம்.

குழந்தைத் திருமணங்களின் வழி பிறந்த குழந்தைகள் முறைமணப்பிறப்பாதல்.

6. குழந்தைத் திருமணமொன்று 3 ஆம் பிரிவின்படி செல்லாநிலையதெனத் தீர்ப்பாணையொன்றினால் செல்லாநிலையதாக்கப் பட்டிருந்த போதிலும், தீர்ப்பாணை பிறப்பிப்பதற்கு முன்பு அத்தகைய திருமணத்தின் வழி ஈன்றெடுக்கப்பட்ட அல்லது கருவிலுள்ள குழந்தை ஒவ்வொன்றும், இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்னரோ அல்லது பின்னரோ பிறந்திருந்தாலும், அனைத்து நோக்கங்களுக்காகவும் முறைமணப்பிறப்பிலான ஒரு குழந்தையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

4 ஆம் பிரிவின்படியோ அல்லது 5 ஆம் பிரிவின்படியோ பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை மாற்றியமைப்பதற்கு மாவட்ட நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

7. மாவட்ட நீதிமன்றமானது, 4 ஆம் பிரிவின்படியோ அல்லது 5 ஆம் பிரிவின்படியோ பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனையும், மனு முடிவுறாநிலையில் இருக்கும் போதும் மனு அறுதியாகத் தீர்வு செய்யப்பட்ட பின்பும் கூட எச்சமயத்திலும் சூழ்நிலைகளில் மாற்றம் எதுவும் இருக்குமாயின், அதனுடன் எதையும் சேர்ப்பதற்கு, மாற்றியமைப்பதற்கு அல்லது முறித்தறவு செய்வதற்கு அதிகாரம் உடையதாக இருக்கும்.

8. 3, 4 மற்றும் 5 ஆம் பிரிவுகளின்படி தீருதவிகள் வழங்கும் நோக்கத்திற்காக, அதிகாரவரம்பு கொண்ட மாவட்ட நீதிமன்றம் என்பது, எதிர்வாதியோ அல்லது குழந்தையோ குடியிருக்கிற, அல்லது திருமணம் முறைப்படி நடத்திவைக்கப்பட்ட அல்லது தரப்பினர்கள் கடைசியாக சேர்ந்து குடியிருந்த அல்லது மனுவை முன்னிடும் தேதியன்று மனுதாரர் குடியிருந்து வருகிற இடத்திற்கு அதிகாரவரம்பு கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்தை உள்ளடக்குதல் வேண்டும்.

எந்த நீதிமன்றத்தில் மனு செய்யப்படுதல் வேண்டும்.

9. பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட வயதுவந்த ஆணாக இருந்து குழந்தைத் திருமணம் ஒன்றைச் செய்துகொள்ளும் எவரொருவரும், இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் கடுங்காவல் சிறைத் தண்டனையோ அல்லது ஒரு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதமோ விதித்து அல்லது அவை இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

குழந்தைத் திருமணம் செய்து கொள்ளும் வயதுவந்த ஆணுக்கான தண்டனை.

10. குழந்தைத் திருமணம் எதனையும் நிறைவேற்றிவைக்கிற, நடத்திவைக்கிற, வழிநடத்துகிற அல்லது அதற்கு உடந்தையாயிருக்கிற எவரொருவரும், அந்தத் திருமணம் ஒரு குழந்தைத் திருமணம் அன்று என்று நம்புவதற்கு அவர் காரணம் கொண்டிருந்தார் என்று மெய்ப்பித்தாலன்றி இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்; அத்துடன் ஒரு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும்.

குழந்தைத் திருமணத்தை முறைப்படி நடத்தி வைப்பதற்கான தண்டனை.

11. (1) குழந்தையொன்று குழந்தைத் திருமணம் ஒன்றைச் செய்துகொள்கிறவிடத்து, அமைப்பு அல்லது நபர்களின் குழு ஒன்றின் உறுப்பினர் எவரும் உள்ளடங்கலாக, பெற்றோராகவோ அல்லது காப்பாளராகவோ அல்லது வேறு சட்டப்படியான அல்லது சட்டமுரணான எந்த முறையிலும் அந்தக் குழந்தையைத் தம் பொறுப்பில் கொண்டிருக்கும் பிற நபர் ஒருவராகவோ இருந்து அந்தத் திருமணம் நடைபெறுவதற்கு, திருமணத்திற்கு வந்திருத்தல் அல்லது அதில் கலந்துகொள்ளுதல் உள்ளடங்கலாக, திருமணத்தை ஊக்குவிக்கிற அல்லது அது முறைப்படி நடத்திவைக்கப்பட அனுமதிக்கிற, அல்லது அது முறைப்படி நடத்திவைக்கப்படுவதை அலட்சியம் காரணமாகத் தடுக்கத் தவறுகிற செயல் எதையும் செய்கிற நபர் எவரும், இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்; அத்துடன் ஒரு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதத்திற்கும் கூட உள்ளாதல் வேண்டும்:

குழந்தைத் திருமணங்களை முறைப்படி நடத்தி வைப்பதற்கு, ஊக்குவிப்பதற்கு அல்லது அனுமதிப்பதற்கான தண்டனை.

**வரம்புரையாக:** எந்தவொரு பெண்ணும், சிறைத்தண்டனை விதித்து தண்டிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, மாறானது மெய்ப்பிக்கப்பட்டாலன்றியும் மெய்ப்பிக்கப்படும் வரையிலும், உரிமை வயதடையாத ஒரு குழந்தை, திருமணம் ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறவிடத்து, அத்தகைய உரிமைவயதடையாத குழந்தையைப் பொறுப்பில் கொண்டிருக்கும் நபர் அந்தத் திருமணம் முறைப்படி நடத்தி வைக்கப்படுவதைத் தடுக்க அலட்சியமாகத் தவறியிருக்கிறார் என்று துணிபு கொள்ளப்படுதல் வேண்டும்.

குறித்தசில சூழ்நிலைகளில் ஓர் உரிமை வயதடையாத குழந்தையின் திருமணம் இல்லா நிலையதாதல்.

12. உரிமைவயதடையாத ஒருவராக இருக்கும் ஒரு குழந்தை –

(அ) சட்டமுறையான காப்பாளரின் பொறுப்பிலிருந்து கவர்ந்து செல்லப்படுகிறவிடத்து அல்லது ஆசைகாட்டி அழைத்துச் செல்லப்படுகிறவிடத்து; அல்லது

(ஆ) எந்த ஓர் இடத்திலிருந்தும் வெளியேறுமாறு வலிந்து கட்டாயப்படுத்தப்படுகிறவிடத்து அல்லது வஞ்சனையான முறைகள் எவற்றாலும் தூண்டப்படுகிறவிடத்து; அல்லது

(இ) திருமண நோக்கத்திற்காக விற்பனை செய்யப்பட்டுத் திருமண வகைமுறை ஒன்றுக்குள் ஆளாகச்செய்கிறவிடத்து அல்லது உரிமைவயதடையாதவருக்கு திருமணம் செய்துவைக்கப்பட்ட பின்பு அந்த உரிமைவயதடையாதவர் விற்பனை செய்யப்படவோ அல்லது வணிகம் செய்யப்படவோ அல்லது ஒழுக்கக்கேடான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவோ செய்கிறவிடத்து

அத்தகைய திருமணம் இல்லாநிலையதாகும்.

குழந்தைத் திருமணங்களைத் தடையுறுத்தி உறுத்துக்கட்டளை வழங்குவதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

13. (1) இந்தச் சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலரின் விண்ணப்பம் ஒன்றின் பேரில் அல்லது எந்த நபர் ஒருவரிடமிருந்தும் முறையீடு ஒன்றின் மூலமாகவோ அல்லது பிறவாறாகவோ தகவல் பெறுவதன் பேரில், நீதித்துறை முதல் வகுப்பு நடுவர் ஒருவர் அல்லது பெருநகர நடுவர் ஒருவர், இந்தச் சட்டத்தை மீறி குழந்தைத் திருமணம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றோ அல்லது முறைப்படி நடத்திவைக்கப்பட உள்ளது என்றோ தெளிவுறக்காண்பாராயின், அத்தகைய நடுவர், அத்தகைய திருமணத்தைத் தடையுறுத்தி, அமைப்பு அல்லது நபர்களின் குழு ஒன்றின் உறுப்பினர் உள்ளடங்கலான நபர் எவருக்கும் எதிராக உறுத்துக்கட்டளை ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படியான முறையீடு ஒன்று, குழந்தைத் திருமணம் அல்லது குழந்தைத் திருமணங்கள் முறைப்படி நடத்தி வைக்கப்படுவது நிகழக்கூடிய நிலையில் உள்ளது தொடர்பாக, தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கும் அல்லது நம்புவதற்குக் காரணம் கொண்டிருக்கும் நபர் எவராலும் மற்றும் தகுமானத் தகவலைக் கொண்டிருக்கும் அரசு சாரா அமைப்பு ஒன்றாலும் செய்யப்படலாம்.

(3) நீதித்துறை முதல் வகுப்பு நடுவர் அல்லது பெருநகர நடுவர் நீதிமன்றம் நம்பத்தக்க அறிக்கை அல்லது தகவல் எதனின் அடிப்படையில், *தானேமுற்பட்டும்* கூட புலன்கொள்ளலாம்.

(4) *அக்ஷய திருதியா* போன்ற குறித்தசில நாட்களில் அதிக எண்ணிக்கையில் குழந்தைத் திருமணங்கள் முறைப்படி நடத்தி வைக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கங்களுக்காக, மாவட்டக் குற்றவியல் நடுவர், இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலர் ஒருவருக்கு அளிக்கப்பட்டவாறு அனைத்து அதிகாரங்களுடனும் குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) மாவட்டக் குற்றவியல் நடுவர், குழந்தைத் திருமணங்கள் முறைப்படி நடத்தி வைக்கப்படுவதை நிறுத்துவதற்கோ அல்லது தடுப்பதற்கோ கூடுதல் அதிகாரங்களையும் கூட கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் இந்த நோக்கத்திற்காக, உரிய வழிவகைகள் அனைத்தையும் எடுக்கலாம் மற்றும் தேவைப்படும் குறைந்த அளவு வலுவந்தத்தைப் பயன்படுத்தலாம்.

(6). (1) ஆம் உட்பிரிவின்படி நீதிமன்றம் எந்தவொரு அமைப்பு அல்லது நபர்களின் குழு ஒன்றின் நபர் அல்லது உறுப்பினர் எவருக்கும் எதிராக உறுத்துக்கட்டளை எதுவும் வழங்குவதற்கு முன்னர் நேர்வுக்கேற்ப, அத்தகைய நபருக்கு, அமைப்பு அல்லது நபர்களின் குழு ஒன்றின் உறுப்பினர்களுக்கு முன்னரே அறிவிப்பு கொடுத்து உறுத்துக்கட்டளை வழங்குவதற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு அவர் அல்லது அவர்களுக்கு வாய்ப்பொன்று கொடுத்திருந்தாலன்றி, உறுத்துக்கட்டளை எதுவும் வழங்கப்படுதல் ஆகாது:

**வரம்புரையாக:** உடனடித்தேவை எதுவும் இருக்கும் நேர்வில், நீதிமன்றம், இந்தப் பிரிவின்படி அறிவிப்பு எதுவும் கொடுக்காமல் இடைக்கால உறுத்துக்கட்டளையொன்றை வழங்குவதற்கு அதிகாரம் கொண்டதாக இருக்கும்.

(7). (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்படும் உறுத்துக்கட்டளையொன்று, எந்தத் தரப்பினருக்கு எதிராக உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டதோ அந்தத் தரப்பினருக்கு அறிவிப்புக் கொடுத்து மற்றும் கேட்டறிந்த பின்பு உறுதி செய்யப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(8) நீதிமன்றம், தாமே முற்பட்டோ அல்லது குறையுற்ற நபர் எவரொருவரின் விண்ணப்பத்தின் பேரிலோ, (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட உறுத்துக்கட்டளையொன்றை இரத்து செய்யலாம் அல்லது மாற்றம் செய்யலாம்.

(9). (1) ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று பெறப்படுகிறவிடத்து, நீதிமன்றம் விண்ணப்பதாரருக்கு நேரடியாகவோ அல்லது வழக்குரைஞர் ஒருவர் மூலமாகவோ அதன்முன்பு முன்னிலையாவதற்கு வாய்ப்பொன்றை விரைவாக வழங்குதல் வேண்டும்; மற்றும் நீதிமன்றம், விண்ணப்பதாரரைக் கேட்டறிந்த பின்பு விண்ணப்பத்தை முழுவதுமாகவோ பகுதியளவிலோ ஏற்க மறுக்குமாயின், அது அவ்வாறு செய்வதற்கான காரணங்களை எழுத்து வடிவில் பதிவு செய்தல் வேண்டும்.

(10). (1) ஆம் உட்பிரிவின்படி தமக்கு எதிராக உறுத்துக் கட்டளையொன்று வழங்கப்பட்டிருக்கிறது என்று அறிந்திருந்தும் அத்தகைய உறுத்துக்கட்டளைக்குக் கீழ்ப்படியாதிருக்கும் எவரொருவரும், இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவுக்குச் சிறைத்தண்டனை வகைகளில் இரண்டில் ஒன்றோ அல்லது ஒரு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதமோ விதித்து அல்லது அவை இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்:

**வரம்புரையாக:** எந்தவொரு பெண்ணும், சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் ஆகாது.

14. 13 ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட, உறுத்துக்கட்டளை ஆணை இடைக்காலமானதாகவோ அல்லது அறுதியானதாகவோ, இருந்தாலும் அதனை மீறி முறைப்படி நடத்திவைக்கப்படும் குழந்தைத் திருமணம் எதுவும், *தொடக்கத்திலிருந்தே*, இல்லாநிலையதாகும். உறுத்துக்கட்டளை ஆணைகளை மீறிய குழந்தைத் திருமணங்கள் இல்லாநிலையதாதல்.

2/1974. 15. குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தொகுப்பு, 1973 இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச்சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றச்செயலொன்று பிடியாணையின்றிக் கைது செய்வதற்குரியதும் பிணையில் விடத்தகாததும் ஆகும். குற்றச்செயல்கள் பிடியாணையின்றிக் கைது செய்வதற்குரியதும், பிணையில் விடத்தகாததும் ஆகும்.

16. (1) மாநில அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, மாநிலம் முழுவதற்கு அல்லது அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய பகுதிக்கு, அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்ட பகுதி அல்லது பகுதிகளுக்கு அதிகாரவரம்பு கொண்ட குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலர் என அறியப்பெறும் ஓர் அலுவலரை அல்லது அலுவலர்களை அமர்த்துதல் வேண்டும். குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலர்கள்.

(2) மாநில அரசு, சமுதாயச் சேவையில் உச்சநிலையில் இருக்கும் அவ்வட்டாரப்பகுதியின் மதிப்புமிகு உறுப்பினர் ஒருவரை அல்லது கிராம ஊராட்சியின் அல்லது நகராட்சியின் அலுவலர் ஒருவரை அல்லது அரசின் அல்லது பொதுத்துறை நிறுவனம் எதனின் அலுவலர் ஒருவரை அல்லது அரசு–சாரா அமைப்பு எதனின் பதவிப் பொறுப்பாளர் ஒருவரைக் கூட குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலருக்கு உதவுமாறு கோரலாம்; மற்றும் நேர்வுக்கேற்ப, அத்தகைய உறுப்பினரோ, அலுவலரோ அல்லது பதவிப்பொறுப்பாளரோ அதற்கிணங்க செயல்படுவதற்குக் கட்டுப்பட்டவர் ஆவார்.

(3) குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலர்–

(அ) பொருத்தமெனக் கொள்ளலாகும் அத்தகைய நடவடிக்கை எடுப்பதன் மூலமாகக் குழந்தைத் திருமணங்கள் முறைப்படி நடத்தி வைக்கப்படுவதைத் தடை செய்வதும்;

(ஆ) இந்தச் சட்டத்தின் வகையங்களை மீறும் நபர்கள் மீது திறம்பட குற்றவழக்கு நடத்துவதற்காகச் சான்றுகளைச் சேகரிப்பதும்;

(இ) குழந்தைத் திருமணங்களை முறைப்படி நடத்திவைத்தலை ஆதரிப்பதில், உதவுவதில், அதற்குத் துணை செய்வதில் அல்லது அனுமதிப்பதில் ஈடுபட வேண்டாமெனத் தனிப்பட்ட நிகழ்வுகளில அறிவுரை கூறுதலோ அல்லது வட்டாரப்பகுதியில் குடியிருப்பவர்களுக்குப் பொதுவாக எச்சரிக்கை செய்தலோ;

(ஈ) குழந்தைத் திருமணங்களிலிருந்து விளைவுறும் தீங்கு பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதும்;

(உ) குழந்தைத் திருமணங்கள் பற்றிய பிரச்சனை குறித்து சமுதாயத்திற்கு உணர்திறன் ஊட்டுவதும்;

(ஊ) மாநில அரசு பணிக்கலாகும் அத்தகைய காலமுறை விவர அறிக்கைகளையும் புள்ளிவிவரங்களையும் அளிப்பதும்;

(எ) மாநில அரசால் அவருக்குக் குறித்தளிக்கப்படலாகும் அத்தகைய செயற்பணிகளையும் கடமைகளையும் ஆற்றுவதும்

அவருடைய கடமையாகும்.

(4) மாநில அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டு, குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலரிடம் ஒரு காவல் அலுவலருக்குள்ள அத்தகைய அதிகாரங்களை ஒப்படைக்கலாம் மற்றும் குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலர், அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும், அத்தகைய வரைக்கட்டுகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டு அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதல் வேண்டும்.

(5) குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலர், **4**, **5** மற்றும் **13** ஆம் பிரிவுகளின் படியான ஓர் ஆணைக்காக **3** ஆம் பிரிவின்படி குழந்தையுடன் நீதிமன்றத்தை அணுகுவதற்கு அதிகாரம் உடையவர் ஆவார்.

குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலர்கள் பொதுப் பணியாளர்களாக இருத்தல்.

**17.** குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலர்கள், இந்திய தண்டனைச் சட்டத்தொகுப்பின் **21** ஆம் பிரிவின் பொருளின்படி பொதுப் பணியாளர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும். 45/1860.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**18.** இந்தச் சட்டத்தை அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதனையும் பின்பற்றி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனையும் பொறுத்துக் குழந்தைத் திருமணத் தடையுறுத்து அலுவலருக்கு எதிராக உரிமைவழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்டமுறை நடவடிக்கைகள் எவையும் எடுக்க உற்றது ஆகாது.

19. (1) மாநில அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம். விதிகள் செய்வதற்கு மாநில அரசுக்குள்ள அதிகாரம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில் மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

20. இந்துத் திருமணச் சட்டம், 1955 இல், 18 ஆம் பிரிவில், (அ) கூறுக்கு மாற்றாக, பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :– சட்ட எண் 25/1955க்கான திருத்தம்.

"(அ) 5 ஆம் பிரிவின் (iii) ஆம் கூறில் குறித்துரைக்கப்பட்ட வரைக்கட்டினை மீறுகிற நேர்வில், இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து அல்லது ஒரு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதம் விதித்து, அல்லது அவை இரண்டும் விதித்து''.

19/1929. 21. (1) குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 1929 ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. நீக்கறவும் காப்புரைகளும்.

(2) அத்தகைய நீக்கறவு இருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின் தொடக்கநிலையில் மேற்சொன்ன சட்டத்தின்படி முடிவுறாநிலையிலிருக்கும் அல்லது தொடர்ந்து நடத்தப்படும் அனைத்து வழக்குகளும், பிற நடவடிக்கைகளும், இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருந்தாற்போன்று, நீக்கறவுசெய்யப்பட்ட சட்டத்தின் வகையங்களின்படி தொடர்ந்து நடத்தப்படுதலும் தீர்வு செய்யப்படுதலும் வேண்டும்.